
# திராவிடத்தால் வாழ்கிறோம்

806

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

105

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன் பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த கே.ஏ.முனுசாமி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

## கே.ஏ.முனுசாமி
## எதிர்ப்புகளைத் தகர்த்த ஆந்திர வீரர்!



1953-ஆம் ஆண்டு வாக்கில் மொழிவாரி மாநில எல்லைப் பிரச்சினைகள் தீவிரமடைந்த போது, தமிழ்நாட்டின் வடக்கு எல்லையில் தமிழ்பேசும் மக்கள் வசிக்கும் திருத்தணி, பொதட்டூர்பேட்டை, நகரி, புத்தூர் பகுதிகள் ஆந்திராவில் சேர்க்கப்படுவதற்கான அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்புக்கு எதிராக எல்லைப்பகுதி காக்க, அனைத்து கட்சியினரும் ஒருங்கிணைந்து நின்றனர். 23.04.1953 அன்று பேரறிஞர் அண்ணா, கலைஞர், அரங்கண்ணல் ஆகியோர் திருத்தணி சென்று அறப் போராட்டத்தைத் தலைமையேற்ற சட்டமன்ற உறுப்பினர் விநாயகத்தைச் சந்தித்து ஆதரவளித்த போது, அறப்போரின் நோக்கத்தை விளக்கி, தி.மு.கழகத்தின் உதவியைக் கோரினார் விநாயகம்.

வட ஆற்காடு மாவட்டக் கழகச் செயலாளர் எ.எல்.சி. கிருஷ்ணசாமி, 200 தொண்டர்களுடன் ஏற்கெனவே களத்தில் இருந்தார். எனினும், அதற்கு அடுத்த இரண்டு நாட்களில், லால்குடியில் நடைபெற்ற ‘டால்மியாபுரம்’ பெயர் மாற்ற மாநாட்டில், ‘எல்லைப் போரில் ஆந்திர தி.மு.கழகத்தினர் முழு ஒத்துழைப்பு அளிப்பது’ என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை ஆந்திர கழகத்தின் சார்பில், வரவேற்று, களம் கண்டார் ஓர் இளைஞர்.

1954-ஆம் ஆண்டு சித்தூர் மாவட்டக் கழக மாநாடு, பொதட்டூர்பேட்டையில் நடைபெற்றபோது, மாநாட்டுக் குழுவில் இருந்த அந்த இளைஞர் அண்ணாவின் கவனம் ஈர்த்தார். 1955-ஆம் ஆண்டு ஆந்திராவில் தேர்தல் நடைபெற்றபோது, தமிழர்களின் சார்பிலான ‘வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு’ நான்கு வேட்பாளர்களை நிறுத்தியது. அவர்களை ஆதரிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்திய அண்ணா, அவர்களை வெற்றிபெற வைக்க உழைக்க வேண்டும் என ஆந்திர கழகத்தினருக்கு அறிக்கை விடுத்தார். அந்த இளைஞர், 23 வயதில் ஆந்திர தி.மு.கழகத்தின் சார்பில், அண்ணா அழைத்து கருத்து கேட்ட அந்த இளைஞர் கே.ஏ.முனுசாமி. ‘எட்டு வயதிலேயே சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, பிஞ்சு வயதில் அஞ்சா நெஞ்சராக உருவானவர்’ என முத்தமிழறிஞர் கலைஞர் போற்றிய உடன் பிறப்பு கே.ஏ.முனுசாமி.

### போக்கிரிக் குடும்பம்

சொந்த ஊர் ஏகாம்பரக்குப்பம். இன்றைய ஆந்திராவின் சித்தூர் மாவட்டத்தில் நகரிக்கு அருகில் உள்ள சிற்றூர். அன்றைய சென்னை மாகாணத்தில் வட ஆற்காடு பகுதிக்குள் இருந்தது. இப்போதும் திருத்தணிதான் அவர்களுக்கு அருகில் உள்ள நகரம். பெற்றோர் கோகனேரி அண்ணாமலை - நாகம்மாள். இவர்களுக்கு மூன்றாவது மகனாக 1932-ஆம் ஆண்டு பிறந்தார் முனுசாமி.

இவரது முரட்டுத்தனத்தனமான போக்குகளால், ஏழு வயதிலேயே ‘போக்கிரிப் பையன்’ எனும் பட்டம் வாங்கிவிட்டார். மகனின் எதிர்காலம் குறித்து கவலையடைந்த அவரது பெற்றோர், 1942-ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் அருகில் வாலாஜாபாத் பள்ளியில் சேர்த்துவிட்டனர். அவர் போக்கிரியாக வளர்ந்துவிடக்கூடாது என அக்கறை கொண்டிருந்த பெற்றோருக்கு முன், அவர் பண்பட்ட பகுத்தறிவு அரசியல்வாதியாகப் பின்னாட்களில் போய் நின்றார்.

காஞ்சிபுரம் சுற்றுவட்டாரங்களில் பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துகள் தீயாகப் பரவி வந்த நாட்களில்தான் முனுசாமி பள்ளியில் சேர்க்கப்பட்டார். பேரறிஞர் அண்ணா மற்றும் கழகத்தின் பல முன்னோடிகளும் அன்று காஞ்சிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள்தான். அண்ணா அந்த நாட்களில் கருஞ்சட்டை அணிந்து கொண்டுதான் மேடையில் பேசுவார். அந்தக் கூட்டங்கள் எங்கு நடைபெற்றாலும், நண்பர்களுடன் சென்று கேட்டுவிட்டு, இரவோடு இரவாக நடந்து பள்ளி விடுதிக்கு வந்து விடுவார் முனுசாமி. விடுதிக் காப்பாளருக்குத் தெரிந்தால் தண்டனை கிடைக்கும். அதற்கெல்லாம் அஞ்சமாட்டார். மீண்டும் மாலை நேரங்களில் பெரியார், அண்ணா கூட்டங்களுக்கும் நாடகங்களுக்கும் சென்று வருவார். பத்து வயதில் வேர் விட்ட திராவிட இன உணர்வு அரசியல், 17 வயதில் சொந்த ஊரில், தி.மு.கழகமாக வேர்விட்டது.

1949-ஆம் ஆண்டு கழகம் தொடங்கப்பட்ட போது, ஏகாம்பரக்குப்பத்தில், அவர் வீட்டில் கருப்பு சிவப்புக் கொடியை ஏற்றினார். உறவினர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதையும் மீறி கழகக் கொடி ஏற்றினார். நெருக்கமான வீடுகள் அமைந்த அந்த ஊரில் பகல் வெயிலில் கழகக் கொடியின் நிழல்கூட விழுவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள்.

> **கழகப் பணிக்குப் பணம் தேவைப்பட்டால், கிராமங்களில் இருக்கும் சில நிலங்களை விற்பனை செய்து விடுவேன்!**

கழகக் கொடிகளை அறுத்து எறிவார்கள். அதற்கெல்லாம் அஞ்சாமல் கொடிக்கம்பத்தை வெட்டிச் சாய்க்கச் சாய்க்க மறுநிமிடமே கழகக் கொடிமரம் எழுந்து கொண்டேயிருக்கும். இதனால், அன்றைக்கு அவரது குடும்பம் பெற்ற பெயர் “போக்கிரிக் குடும்பம்”. அதேநேரத்தில் கருத்தியல் பலம்கொண்டு எல்லா எதிர்ப்புகளையும் வென்றவர்.

### ஆந்திர கிளைக் கழகம்

அன்றைக்கு ஆந்திராவில் தமிழர்கள் அதிகம் வசித்த சித்தூர் நெல்லூர் மாவட்டங்களில் முனுசாமி, கிளைக் கழகங்களை உருவாக்கிய பல செய்திகள் ‘திராவிடன்’, ‘நம்நாடு’ இதழ்களில் பதிவாகியுள்ளன. அண்ணா, கலைஞர், என்.வி.என் என மூத்த தலைவர்கள் அத்தனை பேரையும் அழைத்து, கூட்டங்களை நடத்தி, கட்சி வளர்த்தவர் முனுசாமி.

கலைஞரின் ‘பரப்பிரம்மம்’ நாடகத்தை ஓராண்டுக்கும் மேலாக, ஆந்திராவின் பல ஊர்களில் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார். எம்.ஆர்.ராதா நாடகங்களையும் அந்தப் பகுதிகளில் நடத்தி, அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

கழகத்திற்கு ஆந்திராவில் செல்வாக்கு உருவாகும் வகையில், 1954-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை 500 க்கும் மேற்பட்ட கிளைக் கழகங்களைத் தொடங்கி இருக்கிறார். 1966-ஆம் ஆண்டு ஆந்திர மாநிலப் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் ஆந்திர மாநிலக் கழக அமைப்பாளராக நியமித்தார் கலைஞர்.

### சுயமரியாதைத் திருமணங்கள்

ஆந்திராவில் கழகத்தின் குரலாகவும் முகமாகவும் வலம் வந்த முனுசாமி, தலைமைக் கழகத்தின் அத்தனை போராட்டங்களிலும் தமிழ்நாட்டுக்கு வந்து கலந்து கொள்வதை வழக்கமாக வைத்திருந்தார். அப்பகுதிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட சுயமரியாதைத் திருமணங்களையும் நடத்தியவர்.

ஆந்திர மாநிலத்தில் கழகம் வளர்வதற்கு காரணமான இவரது கழகத் தொண்டினைப் பாராட்டி, தலைமைக் கழகத்தின் சார்பில், 2007 -ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அண்ணா விருதினை வழங்கிச் சிறப்பித்தார்.

அப்போது, ஆந்திராவில் கழகப் பணிகள் குறித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டவர், கழகப் பணிகளுக்காக, குடும்பத்தில் தனக்குக் கிடைத்த சொத்துகளை இழந்த கதைகளைக் கூறி சிலிர்க்க வைத்தார். “எனக்கு எந்தத் தொழிலும் செய்யத் தெரியாது. ஏராளமான சொத்துக்களைப் பெரியவர்கள் சம்பாதித்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். கழகப் பணிக்குப் பணம் தேவைப்பட்டால், கிராமங்களில் இருக்கும் சில நிலங்களை விற்பனை செய்து விடுவேன்’ என தன்னலம் கருதாத பண்பினைப் பறைசாற்றினார்.

உறுதிமிக்க இந்த உடன்பிறப்பு வயதுமூப்பு காரணமாக, 2016-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இயற்கை எய்தினார். இன்றைய கழகத் தலைவர் அவர்கள், நேரில் சென்று இறுதி மரியாதை செலுத்தினார்.

முப்பெரும் விழா விருது மேடையில் அவரது உரைதான், கழகத்தினர் அத்தனை பேருக்கும் அவர் விடுத்த சவாலாக இருந்தது. “நான் எந்த ஊரில் இருந்தாலும், ஒவ்வொரு நாளும் ‘முரசொலி’யை வாசிக்காமல் வெளியே கிளம்பியதில்லை. இதற்கு சோதனை வைத்துக் கொள்ளலாம், இதை ஆந்திர மாநிலத்தில் இருந்துகொண்டு அறைகூவல் விடுக்கிறேன்” என்றார். அன்று அவரது உரை, கழகத்தினர் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக இருந்தது. அந்தப் பாடத்தை என்றென்றைக்கும் இளையோர் கற்க வேண்டும்!

...துடிக்கும்

## தமிழ்நாட்டின் தலைவருக்கு நன்றி!

சாதிய - மதவாத சமூக அமைப்பில் இருந்து மக்களை விடுவிக்க, பெரியாரும் அம்பேத்கரும் கண்ட கனவுகளைச் செயல்படுத்தும் சரித்திரத் திட்டங்களை, தி.மு.க. அரசு செயல்படுத்தி வருவதாக சமூக வலைத்தளப் பக்கத்தில் பாராட்டியுள்ளார், திராவிட இயக்கச் செயல்பாட்டாளர் அதி அசுரன்.

அவரது பதிவில், “உயர் ரக ஆயுதம் தாங்கிய பெரும் இராணுவத்தையும், அனைத்து அதிகாரங்களும் கொண்ட அரசையும், எதிர்ப்பே இல்லாத அரசியல் சூழலையும் கையில் வைத்துக் கொண்டு இரஷ்யாவின் சமுதாய அமைப்பையே புரட்டிப் போட்டார் ஜோசப் ஸ்டாலின். ஒன்றிய இந்து மதவாத பா.ஜ.க அரசின் தொடர் தாக்குதல், அமலாக்கத்துறை மிரட்டல்கள், ஆளுநர்களின் எதிர்ப்பு, ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சிகள், அடிமை அரசியல் கட்சிகளின் தொடர் தொல்லை, மாநில அரசின் அதிகாரக் குறைப்பு எனப் பல தடைகளைத் தகர்த்து யாரும் எதிர்பார்க்கவே முடியாத சமுதாய மாற்றங்களுக்கு உரிய விதைப்புப் பணிகளைச் செய்து முடிக்கிறார் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

2018-லிருந்து நாங்கள் முன்னெடுத்த கோரிக்கைகளில் ஒன்று “எளிய மக்களுக்கான அரசு முதியோர் இல்லங்கள்”. அவை தமிழ்நாடு அரசின் 2025 நிதிநிலை அறிக்கையில் “அன்புச் சோலை” யாக முகிழ்ந்தன. “அன்புச்சோலைகள் பகல் நேரப் பராமரிப்பு மய்யங்களாகத் தொடங்கப்பட்டாலும், அடுத்தடுத்து முழுமையான முதியோர் இல்லங்களாக வளர வேண்டும்” என்று அப்போதே வேண்டுகோள் விடுத்தோம்.

உடனடியாக நேற்று (09.04.25) தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை மானியக்கோரிக்கை விவாதத்தில், “எளிய கட்டடத் தொழிலாளர்களுக்கு முழுமையான முதியோர் இல்லங்கள் உருவாக்கப்படும்” என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

‘குழந்தைகள் காப்பகம்’, முதியோரைக் கவனிக்க அன்புச் சோலைகள், எளிய மக்களுக்கான ‘முதியோர் இல்லங்கள்’, ‘தோழி விடுதிகள்’ போன்றவையும், இனி வரப்போகிற பொதுச் சமையலறை போன்றவையும் மதவாத சமூக அமைப்பில் இருந்து மக்களை வெளியேற்ற தோழர் பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் கண்ட கனவைச் செயல்படுத்தப்போகும் விதைப்புகள். தமிழ்நாட்டின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி” எனப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



திருமாறன் ஜேசி

### கழகம் போட்டுத் தந்த அடித்தளம்!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன், ‘கழக முன்னோடி’ என் தாத்தா அறந்தாங்கி கோட்டை மாரிமுத்து அவர்கள் இருக்கும் இந்தப் புகைப்படம், 1970 களில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம். என் சிறு வயதில் வீட்டில் இருந்த 30 அடி உயர இரும்பு கொடிக்கம்பத்தில் ஏறி சாயம் போன பழைய கொடியை நீக்கி, புதிய கொடியை பல முறை மாற்றியிருக்கிறேன். பின்னோக்கிப் பார்க்கையில் நெகிழ்ச்சியாக உணர்கிறேன். கழகம் அமைத்துக் கொடுத்த அடித்தளம்தான் இன்று என்னைப் போன்ற பலர் கல்வி, வேலை வாய்ப்புகளில் முறையான உரிமைகளைப் பெற்று தன்னிறைவு வாழ்க்கை வாழக் காரணம்.

**- திருமாறன் ஜேசி, அறந்தாங்கி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தியாகராயர் கல்லூரிக்கு நிதி

1953-ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் சென்னை, வண்ணாரப்பேட்டையில் அமைந்துள்ள, தியாகராயர் கல்லூரிக்கு நிதி திரட்டும் வகையில் கழகத்தின் ஆதரவுடன் நாடகங்கள் நடத்தப்பட்டன. ‘நீதிதேவன் மயக்கம்’, ‘ரத்தக் கண்ணீர்’, ‘மனோகரா’, ‘பணம்’ எனப் பல நாடகங்கள் நடத்தப்பட்டன. ‘திராவிட நாடு’ இதழில் நாடகம் குறித்த செய்தியை வெளியிட்டு உதவினார், பேரறிஞர் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.